அரசுச் செய்தி வெளியீடு எண்: 370 செய்திக் குறிப்பு நாள்: 20.06.2007

தமிழக அரசு 2007–2008 ஆம் கல்வி ஆண்டில் ஆசிரியர் சமுதாயத்தின் நலனுக்கான வெளிப்படையான தெளிவான ஒளிவு மறைவற்ற கலந்தாய்வு முறையில் பொது மாறுதல் நடத்த ஆரசாணை வெளியிட்டுள்ளது. இதனால், அனைத்து வகை ஆசிரியர்களும் பயன் பெறுவார்கள். கலந்தாய்வு நடைபெறும் நாள் அன்றே மாறுதல் ஆணைகள் நேரடியாக ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். அரசு மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் அரசு உயர் நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களுக்கும் ( முதுகலை ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர் (மேல்நிலைக்கல்வி) , பள்ளிஉதவி ஆசிரியர் , தமிழாசிரியர், இடைநிலை ஆசிரியர், சிறப்பாசிரியர், உடற்கல்வி ஆசிரியர், மற்றும் உடற்கல்வி இயக்குநர் (நிலை 2), அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையிலும் , அரசு மேல் நிலைப்பள்ளி / அரசு உயர் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு சென்னையில் பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமையிலும் இணைப்பில் கண்டுள்ளவாறு மாறுதல் கலந்தாலோசனை நடைபெறும்.

பொது மாறுதல் வழங்குதலுக்கான வெளிப்படையான தெளிவான, ஒளிவு மறைவற்ற கலந்தாலோசனை கீழ்க்கண்ட முன்னுரிமைகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

ஒரு பணியிடத்திற்கு ஒருவருக்குமேல் மாறுதல் கோரினால் கீழ்க்கண்ட நெறிமுறைகளைக் கையாண்டு முன்னுரிமை வழங்கவேண்டும்.

(அ) இராணுவத்தில் பணிபுரியும் பணியாளர்களின் கணவன்/ மனைவியர்.

(ஆ) (i) முற்றிலும் கண்பார்வையற்றவர்கள் (total blindness)

(ii) மூன்று சக்கர வண்டியில் பயணம் செய்யும் அளவிற்கு உடல் ஊனமுற்றவர்கள். இரண்டு கால்களும் பாதிக்கப் பட்டு ஊன்றுகோல் துணையுடன் (Using Calipers) மெதுவாக செல்லக்கூடிய நிலையில் உள்ள ஊனமுற்ற வர்கள்

(iii) இருதய அறுவை சிகிச்சை மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள்.

(iv) கடுமையாக பாதிக்கப்பட்ட புற்றுநோயாளிகள்

(இ) விதவைகள் மற்றும் 40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத முதுநிலை கன்னியர்.

(ஈ) ஒரே இடத்தில் குறைந்த பட்சம் ஓர் ஆண்டும் (31.5.2007 அன்று) அதற்கு மேலும் பணியாற்றிய ஆசிரியர்கள்.

(உ) கணவன் மனைவி இருவரும் பணியில் இருப்பவர்கள் எனினும் ஏற்கனவே ஒரு தம்பதியினர்(கணவன்/மனைவி) 20 கி.மீ. சுற்றளவு தூரத்தில் உள்ள இடத்தில் பணிபுரியும் பட்சத்தில் அவர்களை separation எனக் கருதி கணவன் மனைவி முன்னுரிமை அளிக்கப்படமாட்டாது. ஒருமுறை கணவனோ அல்லது மனைவியோ கலந்தாலோசணை நிகழ்வு மூலமாக மாறுதல் பெற்றவர்கள் மீண்டும் குறைந்தது இரண்டுஆண்டுகளுக்குமாறுதலுக்கு விண்ணப்பிக்கக் கூடாது. கணவன், மனைவி என்ற முன்னுரிமை அடிப்படையில் மாறுதல் கோரும் போது அந்த மாறுதல் கோரும் இடமானது கணவனோ, மனைவியோ பணிபுரியும் இடத்திலிருந்து அதே மாவட்டத்திற்குள்ளோ அல்லது குறைந்தது 40 கி.மீ. சுற்றளவிற்குள்ளோ இருத்தல் வேண்டும். கணவன் மனைவி என்ற முன்னுரிமை மைய அரசு, மாநில அரசு அலுவலகங்கள், பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள்

மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு மட்டுமே பொருந்தும். அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட உரிய அலுவலர்களால் பணிச்சான்று வழங்கப்படவேண்டும். இதில் மைய அரசு/மாநில அரசு/பொதுத்துறை நிறுவனம் என்ற பாகுபாடு கிடையாது

(ஊ). பிற ஆசிரியர்கள்.

2. கணவன் அல்லது மனைவி திடீரென்று விபத்திலோ அல்லது நோய் வாய்ப்பட்டு இறந்தாலோ அத்தகைய ஆசிரியர்கள் குறித்த நிகழ்வுகளில் கலந்தாய்வு குறித்த விதிமுறைகளை கடைபிடிக்காமல் சிறப்பு நிகழ்வாக வழங்கலாம்.

I. மாவட்டங்களில் அனைத்து வகை ஆசிரியர்களுக்கு

பள்ளிக் கல்வி துறையில் அரசு உயர் நிலை பள்ளிகள் மற்றும் அரசு மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் அனைத்து வகை ஆசிரியர்களுக்கான ( தலைமை ஆசிரியர்கள் நீங்கலாக) மாவட்டத்திற்குள்ளேயும் , மாவட்டம் விட்டு வேறு மாவட்டத்திற்கும் ஆகிய பொது மாறுதல்களுக்கான கலந்தாலோசனை அழைப்பு, கீழ்க்காணும் விவரப்படி அந்தந்த மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களின் முன்னிலையில் அரசால் வழங்கப்பட்டுள்ள மாறுதல் நெறிமுறைகளின்படி நடைபெறும். கலந்தாலோசனை நடைபெறவுள்ள இடம் பற்றிய விவரம் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களால் தெரிவிக்கப்படும்.

அட்டவணை

| நாள் | கிழமை | நேரம் | ஆசிரியர்கள் வகை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 23.6.2007 | சனிக்கிழமை | காலை 8.30 | பள்ளிஉதவி ஆசிரியாகள், தமிழாசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் உடற்கல்வி இயக்குநர் (நிலை 2) | மாவட்டத்திற்குள் மாறுதல்கள் மட்டும் |
| 23.6.2007 | சனிக்கிழமை | மதியம் 2.00 | முதுகலை ஆசிரியர்கள் உடற்கல்வி இயக்குநர் (மேல்நிலைக்கல்வி) | மாவட்டத்திற்குள் மாறுதல்கள் மட்டும் |
| 24.6.2007 | ஞாயிறு | காலை 9.00 | பள்ளிஉதவி ஆசிரியாகள், தமிழாசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் உடற்கல்வி இயக்குநர் (நிலை 2) | வெளி மாவட்ட மாறுதல்கள் (மாவட்டம் விட்டு மாவட்ட மாறுதல்கள்) |
| 24.6.2007 | ஞாயிறு | மதியம் 2.00 | முதுகலை ஆசிரியர்கள் உடற்கல்வி இயக்குநர் (மேல்நிலைக்கல்வி) | வெளி மாவட்ட மாறு தல்கள் (மாவட்டம் விட்டு மாவட்ட மாறுதல்கள் ) |

மாவட்டம் விட்டு வேறு மாவட்டத்திற்கு மாறுதல் கோரும் ஆசிரியர்கள் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக எந்த மாவட்டத்திற்கு மாறுதல் கோருகின்றனரோ, அந்த மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலருக்கு விண்ணப்பத்தினை அனுப்புதல் வேண்டும். இவ்வகை ஆசிரியர்கள் அவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நாளில் கலந்தாய்வில் கலந்து கொள்ள அறிவுறுத்தப்படவேண்டும்.

2. சென்னையில் அரசு மேல் நிலை மற்றும் அரசு உயர் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு

அரசு மேல் நிலை பள்ளி / அரசு உயர் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான பொது மாறுதல்களுக்கான கலந்தாலோசனை சென்னையில் பள்ளிக் கல்வி இயக்குநர் முன்னிலையில் நடைபெறும்

**இடம் : அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, அசோக்நகர்,சென்னை.83**

அரசு மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள்

| நாள் | கிழமை | நேரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 30.6.2007 | சனிக்கிழமை | முற்பகல் 8.30 மணி | மாவட்டத்திற்குள் மாறுதல்கள் மட்டும் |
| | | பிற்பகல் 2.00 மணி | வெளி மாவட்ட மாறுதல்கள் ( மாவட்டம் விட்டு மாவட்ட மாறுதல்கள் மட்டும் ) |

அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள்

| நாள் | கிழமை | நேரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 01.07.2007 | ஞாயிறுகிழமை | முற்பகல் 9.00மணி | மாவட்டத்திற்குள் மாறுதல்கள் மட்டும் |
| | | பிற்பகல் 2.00 மணி | வெளி மாவட்ட மாறுதல்கள் ( மாவட்டம் விட்டு மாவட்ட மாறுதல்கள் மட்டும் ) |

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள காலிப்பணியிடங்கள் விவரம் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகங்களில் தகவல் பலகையில் ஒட்டப்படிருக்கும். மாறுதல் விரும்பும் ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் முதன்மைக் கல்வி அலுவலகங்களில் தகவல் பலகையில் வெளியிடப்பட்டுள்ள காலிப் பணியிடங்களின் விவரங்களை தெரிந்து கொண்டு உரிய விண்ணப்பத்தினை முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாக அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

வெளியீடு: இயக்குநர்
செய்தி மக்கள் தொடர்புத்துறை
சென்னை.

பள்ளிக் கல்வி இயக்குநர்